Reg. No. M. 2997.

தனிப்பிரதி அணா 1

ஆசிரியர்:
யாழ்ப்பாணம்
தென்கோவை
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

Bureau de la Direction:—
RUE D'AMBALATADOU AYER
MADAM NO. 4, Pondichery

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.

காரியாலயம்:—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி
நெ. 4, புதுவை.

VOL. I. { புதுவை, பவ-ஸூ ஆவணி-மீ -உஉ உ (6—9—34) } No. 41.

திருமந்திரம்

புடவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை
யடையப்பட் டார்களு மன்பில ரானார்
கோடையில்லை கேளில்லை கொண்ட நட்பில்லை
நடையில்லை நாட்டி லியங்குகின் றார்கட்கே.

பொய்க்குழி தூர்ப்பான் புலரி புலருதேன்
றக்குழி தூர்க்கு மரும்பண்டந் தேடவே
ரெக்குழிதூர்த்து மிறைவனை யேத்துமி
னக்குழி தூரு மழுக்கற்ற வாறே.

கற்குழி தூரக் கனகமுந் தேடவே
ரக்குழி தூர்க்கை யாவர்க்கு மரிய
தக்குழி தூர்க்கு மறிவை யறிந்தபி
னக்குழி தூரு மழுக்கற்ற வாறே.

தொடர்ந்தெழுஞ் சுற்றம் வினையினுந் தீய
கடந்ததோ ராவி கழிவதன் முன்னே
யுடந்தொகு காலத் துணர்விளக் கேற்றித்
தொடர்ந்துநின் றவ்வழி தூர்க்கலு மாமே.

நெய்கின் றெரியு நெடுஞ்சுட ரேசென்று
மைகின் றெரியும் வகையறி வார்கட்கு
மைகின் றவிழ்தரு மத்தின மாமென்றுஞ்
செய்கின்ற செல்வ மதியது வாமே.

ஒண்சுட ரானை யுலப்பிலி நாதனை
யொண் சுட ராகியென் னுள்ளத் திருக்கின்ற
கண்சுட ரோனுல கேழுங் கடந்தவத்
தண்சுட ரோமத் தலைவனு மாமே.

உ
திருவருள் துணை

காலமுண் டாகவே காதல்செய்
 துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
 வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
 பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
 றுன்வந்து முந்துமினே.
(திருவாசகம்)

வித்தகம்

புதுவை
பவ-ஸு ஆவணி-மீ 22உ

பண்டைக் காலப் பௌத்த சமணரும் தற்காலச் சைவரும்

பண்டைக் காலப்பௌத்த சமணருக்கும் தற்காலச் சைவர் எனப் படுவோர்க்கும் வேற்றுமை மிகச் சிறிதாகவே காணப்படுதலால் அவ் வுண்மை ஈண்டு ஒரு சிறிது விளக்க முற உரைக்கப்படுதல் இன்றியமை யாததாகின்றது.

புத்தர் என்பவர் யார்? புத்தர் என்பவர் மணிவாசகர் காலத்துக்கு முன் இருந்த சிவ பத்தர் ஒருவர் என்பது திருவாசகம் முதலியவற்றால் பெறப் படுகின்றது. அவர் சிவபெருமானிடம் அன்பு பூண்டு அவரைப் பூசித்தவர் என்பது வெள்ளிடை. பின் வரும் திருவாக்குக்கள் இவ் உண்மைக்கு உறுசான்றாகின்றன.

திருவாசகம்

புத்தன் புரந்தரா தியயன்மால் போற்றி செயும்
பித்தன் பெருந்துறை மேயபிரான் பிறப் பறுத்த
அத்த னணிதில்லை யம்பலவ னருட்கழல் கள்
சித்தம் புகுந்தவா தெள்ளேணங் கொட் டாமோ.

(ஷை-திருத் தெள்ளேணம் செ. 16.)

சுந்தரர் தேவாரம்

"சாரணன் தந்தை எம்பிரான் எந்தை
தம்பிரான் என் பொன்மாமணி என்று
பேசொணுவிர கோடி தேவர் பிதற்றி நின்று, பிரிகிலார்
∴................................."

(ஷை–திருப்பாண்டிக்கொடுமுடி–பண் பழம்பஞ்சரம் செ. 9)

புத்தர் லௌகீகத்தில் மிக்க உன்னத நிலையில் வீற்றிருந்தவரேயாயினும் பிணி மூப்புச் சாக்காடுகளுக்கு அஞ்சி உலக வாழ்வில் வெறுப்புற்று உண்மை நிலையை அடைவான் ஆசைப்பட்டும் அதனை ஒருவாறு உணர்ந்தும் ஒழுகியும் பூரண நிலையை அடையமுடியாது இறந்துபோனவரே என்பதும் வெள்ளிடையாம். எத்துணையோ கஷ்டங்களை அடைந்து உண்மையை அறிவான் ஆசைப்பட்டும் அதனை அடைதற்குரிய சாதகங்களைக் குருவருளால் அறிந்து அநுட்டித்து இயற்கையோடு ஒத்து நின்று ஒப்புரவொழுகி விதியை வென்று நித்தியத்துவம் அடையும் பக்குவம் பெறாது சில அநுட்டானங்களைக் கைக்கொண்டு ஒழுகி மரண மடைந்தவர் என்பதே உண்மையாகும். எனினும் அவர் பல யாக்கைகளையும் செய்து அநுபவித்தவர் என்பதும் தற்காலம் வெளிவரும் சில நூல்களால் தெரியவருகின்றது. அவர் தாம் அறிந்தவற்றைப் பிறர்க்குப் போதித்தனர்; புத்த சமயம் என்று புதிய சமயம் ஒன்றைப் போதித்தவரல்லர்; சைவ சமயத்தையே தமது அறிவுக்கு எட்டிய அளவில் பிறர்க்குப் போதித்தனர். ஆனால் அவரின் பின் அவர் கொள்கைகள் நூதனமானவை என்று அக்காலப் போலிச் சைவர் பலரால் கொண்டாடப்பட்டன. அச் சைவர்கள் அக்கொள்கைகளைத் தங்கள் தங்கள் மதிப்பொலிவுக்கு ஏற்பப் பொருள் செய்து அவற்றைப் புதிய சமயம் எனக் கொண்டு வேறு பெயர் சூட்டிப் பலமுறைகளையும் அதிற் புகுத்திப் பௌத்தர் எனவும் சமணர் ஜைனர் எனவும் பல பிரிவுகளைத் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்டார்கள். சமணம் என்னும் ஜைன மதம் பௌத்த மதத்துக்கு முந்தியது எனவும் அதுவேறு இது வேறு எனவும் கூறுவாரும் உளர். எங்ஙனமாயினும் இரண்டற்கும் வேற்றுமை மிகச் சிறிதேயாதலால், மிகப் பழைய காலத்தொட்டே காலந்தோறும் வேத உண்மைக்கு மாறுபட்ட போலிச் சைவரே பௌத்த சமணப் பெயரால் வழங்கப்பட்டனர் என்பது காலந்தோறும் எழுந்த வேத நூல்களால் வெள்ளிடையாகின்றது. இது பற்றியே வேத நூல்கள் இவரையும் இவர் கொள்கையையும் கண்டித்து ஒதுக்கி உண்மையை நிலை நாட்டுவன ஆயின என அறிதல் வேண்டும். புத்தருடைய கொள்கைகள் என்று பலராலும் சிலபல எழுதப்பட்டு வெளிவந்துள்ளன. தற்காலச் சைவசமயக் கொள்கைகளுட் போலவே இவர் கொள்கைகளுள்ளும் பல ஊழல்கள் காணப்படுகின்றன. இவ்வாறாக மணிவாசகர் காலத்துக்கு முன்னேயே சைவம் சீர்கேடடைந்து உண்மை நெறியாகிய சத்திய நெறி — உண்மை முத்தி நிலை மறைந்து விட்டமையால் கண்மணியின் உண்மணியாகிய மணிவாசகப் பிரபு தோன்றித் தமது சொல்லாலும் அரும் பெரும்

செயலாலும் பழைய உண்மைச் சைவக் கொள்கையை நிலை நாட்டி வைத்தனர் என்பது வெள்ளிடைமலையாம். பின்வரும் பிரபல சுருதி இவ் வுண்மையை நன்று வலியுறுத்துதல் கண்டு கொள்க :

திருவாசகம்

புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயந்
தத்த மதங்களிற் றட்டுளுப்புப் பட்டுநிற்கச்
சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக் [கும்
அத்தன் கருணையினாற் றோணோக்க மாடா [மோ.

(ஷை–திருத்தோணோக்கம், செ.6)

மணிவாசகர் சரித்திரம் எழுதிய பிற்காலப் பௌராணிகரும் இவ் உண்மையை ஒருவாறு அறிந்தே

"................................
மாயனிடும் புத்த விருளுடைந்தோட [வந்தொருவர்
சேயவிளம் பரிதி யெனச் சிவனருளால [வதரித்தார்"

(திருவிளையாடற் புராணம்)

என்று கூறுவாராயினர்.

[நிவிர்த்தியாகிய உண்மை நிலைக்கு மாறுபட்டது பிரவிருத்தி நிலை என்பதே "மாயன் இடும் புத்த இருள்" என்னும் கற்பனையின் உண்மைப் பொருளாகும்.]

பின்பு சைவ சமயிகள் பலர் பலப்பல வழிகளையும் மனோதர்மத்தால் கண்டு பிடித்துப் பௌத்த சமண மத மேற்கொண்டு அவைகளே உண்மை எனவும் அவைகளைத் தாமே அன்றிப் பிறர் அறிந்திலர் எனவும் கூறிக் கலாய் விளைத்து உண்மைச் சைவத்தைப் பாழ்படுத்திய போது ஞானசம்பந்தர் அப்பர் சுந்தரர் என்னும் பரமாசாரிய மூர்த்திகளும் அறுபத்து மூவருள் ஏனையோரும் தோன்றித் தமது திருவாக்காலும் அரும் பெரும் செயலாலும் உண்மை இது என உணர்த்திச் சமயத்தைச் சீர்ப்படுத்தி வைத்தனர். சமய குரவர் முதலியோர் காலத்துக்குச் சில நூற்றாண்டுகளின் பின், அன்னவர் நிலை நாட்டிய உண்மை பலர்க்கும் மறை பொருளாய்விடவே, அவர் அருளிய திருமறைகளின் உண்மைகளையும் வேதாகம புராண இதிகாசங்களின் உண்மைப் பொருளையும் அறிய முடியாத சிலர் பௌத்த சமணக் கொள்கைகள் போன்ற சில கொள்கைகளைக் கண்டு பிடித்து அக்கொள்கைகளே வேதாகம சாரம் என்று வெளியிட்டு உடலும் உயிரும் ஒழிவற ஒன்றி அமலமடைந்து அருளாய் வெளியாய்ச் சிவாங்கமாதலே உண்மை முத்தி எனக் கூறும் சத்திய நெறியாகிய உண்மைச் சைவக் கொள்கையைப் பாழ்படுத்தித் தூலம் பிணமாகி விழச் செத்த பின்பு முத்தி உளதாம் என்னும் புதிய போலிச் சைவக் கொள்கையை நாட்டி விட்டனர். இவர் இயற்றி வைத்த நூலுரைகளையே வேதாகம சாரம் எனவும் கயிலை முதற் குரவனாகிய நந்தி பரம்பரையில் வந்தன எனவும் யாதோர் ஆதாரமும் இன்றிக் குருட்டுத்தனமாக நம்பிய தற்காலச் சைவர் எனப்படுவோர் பலர் மணிவாசகர் முதலிய சமயாசாரியர் நிலைநாட்டிய சத்திய நெறியை ஒரு சிறிதும் அறிய முடியாதவராய் இந் நூலுரைகளையே திறவு கோலாகக் கொண்டு திருவாசகம் முதலிய திருமறைகளையும் வேதாகம புராண இதிகாசங்களையும் அநர்த்தஞ் செய்து மற்றைய சமயங்கள் கூறுவது போலவே சரீரம் பிணமாகி விழச் செத்த பின்பு தான்—செத்துப் போவது தான் அரிய பெரிய சைவ சமய முத்தி நிலையாகிய உயரிய சித்தாந்தமும் ஆம் என்று பயனில் பிரசாரணங்கள் புரிந்து, மாற்றிப் பிறந்து நித்தியத்துவம் பெற்ற தத்துவப் பெரியாராகிய சித்த மூர்த்திகளை ஏளனஞ் செய்பவர் போல, மாற்றிப் பிறக்கும் வகை அறியாது பிணமாகி விழுந்து மாண்டு பிறவி வலைப்பட்ட வித்துவான்களாகிய நாம ரூபங்களையும் அவரோடு ஒப்ப மதித்து ஆலயங்களில் பிரதிட்டை செய்து வழிபட வேண்டியது அவசியம் எனவும் பிறவுமாக சமாஜங்கள் கூட்டங்கள் சங்கங்கள் பிரசங்கங்கள் வாயிலாக இயற்கை விரோதமான "தீர்மானங்"களும் செய்து கூத்து நவிற்றுவர் ஆயினர். இது மட்டோ! உண்மை இன்னது எனச் சிறிது கூற முன் வருபவர் மேல் இச் சைவர்களே சீறி எழுந்து அவரைத் "தீவினையாளர்" எனவும், "போலிகள்" எனவும், "வம்பர்" எனவும், "ஒல்லாக் கொள்கையைச் சைவத்துட் புகுத்த முன் வருபவர்" எனவும், சமய குரவர் முதலியோரால் அடையப்பட்ட உண்மை முத்தி நிலையை உரைக்க எழுந்த தெய்விக நூலைச் சைவ நூல் அல்ல எனவும் மனம் போனவாறு இகழ்ந்து களிக்கின்றார்கள்; வேதாகம புராண இதிகாசங்களால் பிரதிபாதிக்கப் படுவதும் எத்தனையோ இருடிகளும் முனிவர்களும் சமய குரவர் முதலிய மெய்யடியார்களும் ஆழ்வார் என்னும் திருநாமத்துக்கு வாய்மையில் இலக்கியமாகி வதிந்த மஹான்களும் பிறரும் உலகு கண்டு போற்றும்படி உடலோடு மறைந்து அடையப்பட்டதுமாகிய உண்மைச் சைவ முத்தியை "மூடக்கோள்கை" எனவும், "ஒல்லாக் கோள்கை" எனவும், "ஒருவகைச் சித்து" எனவும், யாதோ நிட்டையில் இருந்த பாவனையாக நிலத்துட் புதைக்கப்பட்டோரும் மீண்டு வாரா நெறியை அடைந்தவரேயாவர் எனவும், இவ்வாறு இறந்தோரையும் உடலும் உயிரும் ஒழிவற ஒன்றி நித்தியத்துவம் பெற்ற மணிவாசகர் முதலிய தத்துவப் பெரியார் போலப் பாராட்டிப் போற்ற வேண்டியதே முறையாம் எனவும், மெய்யடியார்க் குரிய அன்றுறுக்கை இன்னது என அறியும் ஆற்றலும் காதலும் இல்லாது அவ் அமுத யாக்கை நிலத்துட் புதைக்கப்பட்ட பிணங்களுக்கும் உரியதே எனவும், அதனால் அப் பிணங்களும் நிலத்துக்குள்ளே

அருளாகிக் கரைந்து சிதாகாசப் பெருவெளியில் மறைந்துவிடுகின்றன எனவும் இன்னோரன்ன பிறவும் அப்புக்கூற்றின் ஆதிக்கத்தால் மனம்போனவாறு பிதற்றிப் பழைய உண்மைச் சைவநெறியை ஏளனஞ் செய்து அதற்குமாறாகப் போராடுகின்றார்கள்.

இன்னும் தற்காலத்தவருள்ளே பலர் "புத்த பகவான் கூறியனவே வேத மொழிகள்" எனவும், அவரே சிவகாருண்ணிய மூர்த்தி எனவும் புகழ்ந்து போற்றியும், வாய்மையான சிவகாருண்ணிய மூர்த்திகளாய்த் தண்டமும் அருளும் தகவுறப் புரிந்து உலகோர் உய்யும்படி வேத உண்மைகளை வெளிப்படுத்திய அருளாளர்களாகிய பண்டைக்காலத்து இருடிகள் முனிவர்களும் ஞான சம்பந்தப் பெருமான் முதலிய மெய்யடியார்களும் சீவகாருண்ணியம் அறியாதவர்கள் எனவும், கொலைபாதகர் எனவும், திருடர் எனவும், மருளுடம்புடைய உலக மாக்கள் போலவே தற்சுதந்திர மிகுதியால் போராடினவர் எனவும் பிறவுமாக மனம் போனவாறு வசைமொழிகளும் கூறி அத் தத்துவப் பெரியாரை ஏளனம் செய்தும் செடியுடலோம்பிச் சாதலடையக் கற்றக் குட்டிக் கல்விக் கெறுவத்தால் அன்னவர் அருளிய திருமறைகளை மனம் போனவாறு அனர்த்தம் செய்து இகழ்ந்தும் வேதாகம புராண இதிகாசங்களும் மூர்த்தி தலம் தீர்த்தங்களும் வருணாச்சிரம தருமங்களும் சுயநலம் கருதிய சில மாயினரால் வயிற்று வளர்ப்புக்காக ஏற்படுத்தப்பட்ட கட்டுக்கள் எனவும், இவற்றையும் கடவுள் வழிபாட்டு வகைகளையும் அறவே ஒழித்துவிடுவதே "சுயமரியாதையும்" "சீர்திருத்தமும்" ஆம் எனவும், உண்மையை நாடி உய்தி அடையும் வாயிலாகப் பெரியோரால் கண்டுபிடிக்கப்பட்ட இத்தகைய கற்பனைகளை ஒழித்துவிடவேண்டும் எனக் கங்கணங்கட்டி நின்று ஓவாது முயல்வதே "பணிசெய்து கிடத்தல்" எனவும் தற்சுதந்திரத்தால் இத்தகைய உழைப்பில் ஈடுபட்டு நிற்பவரே "அவதார புருடர்" என்றும், "மகாத்மாக்கள்" என்றும், "வீரர்" என்றும், "சுப்பிரமணியர் அவதாரம்" என்றும் போற்றப்படவேண்டும் எனவும் பத்திரிகைகள் "சொற்பொழிவுகள்" வாயிலாக விஞ்ஞாபனம் செய்தும் மிகப் பெரிய கூக்குரல் போட்டுக் குதிகொண்டு ஆடுவாராயினர்.

பண்டைக் காலத்தும் இவ்வாறேதான் நிகழ்ந்திருத்தல் வேண்டும் என்பதற்கும் தற்கால நிகழ்ச்சிகளே தக்க சான்றுகள் ஆகின்றன அல்லவா? முற்காலத்துள்ள போலிச் சைவர் பலர் தமது சமயம் சைவ சமயம் அல்ல எனவும் அதனின் வேறாய பௌத்த சமண சமயமே எனவும் கூறி, வேதங்களையும் வேத வேள்விகளையும் ஏளனஞ்செய்து உண்மைச் சைவத்துக்கு மாறாகக் கலாம் விளைத்து, உண்மைச் சைவராகிய மெய்யடியார்க்கு இடர் புரிந்து, இவற்றின் பயனாக அவதார புருடரால் கொடிய தண்டனைக்கே ஆளாயினர். ஆதலால் தற்காலச் சைவருட் பெரும்பாலரும் மேல் வெளிப்படவேண்டிய எம்பெருமானால் தண்டனை அடைந்தே உண்மையை உணரவேண்டியவராவர் என்றே கூறவேண்டியதாகின்றது.

பண்டைக்காலப் பௌத்த சமணரும் உண்மைச் சைவக் கொள்கையை—உண்மை முத்தியை ஒப்புக் கொள்ளாது அதனின் வேறுபட்ட போலிச் சைவரே—போலித் தமிழரே ஆவர். அக்காலத்தவர்க்கும் தற்காலத்தவர்க்கும் வேற்றுமை. மிகச் சிறிதென்றே கூறவேண்டும். பெயரளவினும் சில வேடங்களாலும் நடைகொடிகளாலும் இக்காலத்தவர் பலர் தம்மைச் சைவரென்றே கூறினும், இவ் இரு சாராரும் ஓர் இனத்தவர் என்றே கூறவேண்டியதாகின்றது.

முற்காலத்தவர் ஒருவகையான யாகங்கள் செய்வதிலும் வேறு சில பாகங்களிலும் தற்காலத்தவரினும் சிறிது மதிப்பொலிவும் வல்லபமும் பெற்றிருந்தனர் என்று சில நூல்களால் அறியக் கிடப்பினும், அக்காலப் போலிச் சைவராகிய பௌத்த சமணர் வேத வேள்விகளின் உண்மையை அறியும் ஆற்றலும் காதலும் இன்றி அவற்றை ஏளனம் செய்தவர் என்பது அவதார மூர்த்திகள் திருவாக்கால் நன்று வலியுறுகின்றன.

திருஞானசம்பந்தர்

வேதவேள்வியை நிந்தனை செய்துழல்
ஆதமில்லிய மணொடு தேரரை
வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே
பாதிமாதுடனாய பரமனே
ஞால நின்புகழேவேண்டுந்தென்
ஆலவாயிலுறையுமெம்மாதியே.

"வைதிகத்தின் வழியொழுகாத அக்
கைதவம் உடைக்காரமண் தேரரை
................................"

"அந்தணாளர் புரியும் அருமறை
சிந்தைசெய்யா அருகர்......................"

(திருவாலவாய்—ஈரடிமேல் வைப்பு.
செ, 1, 2, 5.)

இவற்றால் பண்டைக்காலப் பௌத்த சமணர் வேத வேள்விகளை நிந்தனை செய்தவர் என்பதும், "வைதிக நெறியில் ஒழுக அறியாத போலிச் சைவர் என்பதும், தத்துவப் பெரியார் அருளிய தத்துவ நூல்களை அனர்த்தஞ் செய்தவர் என்பதும் நன்கு புலப்படும்.

தற்காலத்தவருள்ளும் பலர் இருக்கு முதலிய வேதங்களில் கூறப்பட்ட யாகங்கள் எல்லாம் இழிவான வேள்விகள் எனவும், அதனால் அத்திருமறைகளெல்லாம் சிவ வாக்கல்ல எனவும் கூறி அவற்றைப் பல்லாற்றானும் ஏளனஞ் செய்வாராயினர்.

பாஷைத் துவேஷத்தாலும் போலிச் சாதி அபிமானத்தாலும் தமிழ் வேதங்களை ஏளனஞ் செய்து சிவாபராதிகள் ஆகின்றோரும் பலர்.

தற்காலத்தில் வைதிகமாகிய யாகங்களின் உண்மைகளை அறிந்தவரும் அவற்றை உஞற்ற வல்லவரும் இல்லை என்றே கூறுதல் வேண்டும். இவற்றின் உண்மைகளை அறியும் ஆற்றலும் காதலும் இல்லாத சிலர் தற்சுதந்திர மேலீட்டினால் மிகக் கொடிய பாதகச் செயல்களையே உஞற்றுகின்றனர். வேதங்களை இழிவுபடுத்தக் காரணர் இவரே என்பது மிகை யன்று.

யாகங்கள்—ஓமங்கள் செய்வதற்கு அதிகாரிகள் யாவர்? என்பது கடா. "அக்ஷர ஆன்மாவை அறியாதார் அக்கினி காரியம் செய்வாராயின், அவர் க்ருபண ராவர்." என்னும் யாக்ஞவல்கியர் கூற்றினை நோக்கி உண்மை கண்டு கொள்ளப்படுக.

சிலகாரணங்களால் வேத வேள்விகள் கலியுகத்துக்கு (ஈதென்ன விந்தை!) உரியன அல்ல எனக் கூறி அமைவார் பலர். இவற்றின் உண்மை அமயம் நேர்ந்துழி விளக்கிக் கூறப்படும்.

பண்டைக் காலப் பௌத்த சமணராகிய போலிச் சைவர் உண்மையை உணர்த்துவான் தோன்றிய புண்ணிய சிலர்க்குத் துன்பம் செய்யாது விட்டவரல்லர். எமது அப்பர் சுவாமிகள் முதலிய மெய்யடியார்க்கு இவர் புரிந்த தீமைகளே இதற்கு உறு சான்றாகும். ஆகலால் தற்காலத்தும் எவ்வகையான துன்பமுமின்றி உண்மை நிலை காட்டப்படுவது—உண்மைச் சைவக் கொள்கை ஒப்புக் கொள்ளப்படுவது முடியாத காரியமே என்பது மிகையன்று. ஆயினும் ஈற்றில் உண்மையே வென்றி பெறும் 'சத்தியமே ஜெயம்" என்பது சத்தியம்! சத்தியம்! முக்காலும் கரந்தூக்கி மொழியப்படும் சத்தியமே யாகும்.

நெடுங்காலமாகவே பார்ப்பனப் போலிகளோ, தமிழப் போலிகளாகிய சைவப் போலிகளோ, சமயத்தை ஒரு வியாபாரப் பொருளாகக் கொண்டு, அதற் கேற்றவாறு பண்டைச் சமண பௌத்தர் கொள்கைகளைத் தழுவி இலக்கண இலக்கியத் திறமை தோன்ற நூல்களையும் உஞற்றி, வேத உண்மைக்கு முற்றும் முரண்பாடான முடிபுடைய பொருந்தாப் பொய்யுரைகளாகிய ஆதாரமற்ற விஷயங்களைச் சேர்த்துச் சேர்த்து அதனைப் (சமயத்தை) பாழாக்கிச் செத்துப் போவதே முந்தி எனச் சித்தாந்தஞ் செய்து புதியதோர் போலிச் சைவத்தைச் சிருட்டித்து விட்டனர் என்பது மிகையன்று. சமயம் என்பது, உண்மையை அறியும் ஆற்றலும் காதலும் இல்லாத அச் சிதடர்களுக்கு ஒரு விளையாட்டுப் பொருளாகவும் வயிற்று வளர்ப்புக் குரிய கருவியாகவும் அமைக்கப்பட்டுக் கெட்டுப் போய் விட்டதென்பது வெள்ளிடைமலையாம்.

உண்மை நிலை அடைந்த சிவகாருண்ணிய மூர்த்திகளாகிய நம் முன்னோருள்ளே சிலர் சம்ஸ்கிருதத்திலும் தான் தமிழிலும் தான் தாம் தாம் அநுபவமாக அறிந்த உண்மைகள் சிலவற்றை எழுதிவைத்தனர். அந்தோ! பின்னால் வந்த வியாபாரிகள்—வித்துவான்கள் அச் சிவவாக்குக்களையும் தங்கள் போலிக் கொள்கைகளுக்கு ஏற்ப அநர்த்தம் செய்தலானும் ஈனத்தனமான இடைச் சொருகல் திரிபுகளாலும் பாழாக்கிவிட்டார்கள்! இதற்கு என் செய ஆம்?

தற்காலத்தில் பாஷைகளைக் கற்றுப் பட்டங்களையும் பெற்று அறிவாளிகளெனத் தங்களைத் தாங்களேமதித்துத் தங்களைப் போன்ற எம்போலியர்களால் மதிப்பும் பெற்று வதிவோர் பலர்

"ஒரு பொருள் மற்றொரு பொருளாக மாற்ற மடைய முடியாது"

என்கின்றனர்.

இவர்கள் தங்களை மதியீனர்கள் என்று உணரவில்லை. ஒரு பூதியம் மற்றொரு பூதியமாய் மாற்றமடையும் என்பது வேத வழக்கு. தத்துவப் பெரியார் கண்டு கொண்டு உண்டது இது என இவர் அறியாமைக்கு வருந்துவதே யன்றி வேறு என் செய்வது? தூலம் ஏற்ற சாதகங்களால் சூக்குமமாய்க் காரணமாய் மாறும். மாறிக் கரைந்து மறையும்—ஞானாகாசத்தில் ஒடுங்கும் என்பது வேத உண்மையாகும். இதுவே நிவிர்த்தி முறை—ஒடுக்க முறை ஆம். இதுவே மீண்டு வாரா நெறியாகிய முத்தி நெறி என்பது. ஆகாச சரீரம் பிரமம் எனவும், யாவும் ஆகாசத்தில் ஒடுங்குகின்றன எனவும், அந்த ஆகாசமே ஆனந்தம் எனவும், பிரமம் எனவும் (ஞானாகாசம்—சிதம்பரம்) ஆனந்தமே பிரமம் எனவும் சுருதிகள் முழங்குகின்றன.

தைத்திரியம்

" ஆகாச சரீரம் ப்ரஹ்ம"

(இ-ள்) ஆகாச சரீரம் பிரமம். என்பதாம்.

சாந்தோக்கியம்

"ஸர்வாணி பவா இமாநி பூதாநி
ஆகாசாத் எவ ஸமுத்பத்யந்தே
ஆகாசம் ப்ரத்யஸ்தம் யந்தி"

(1—6—1.)

(இ-ள்) இந்தப் பிராணிகள் அனைத்தும் ஆகாசத்தில் நின்றும் உற்பத்தியாகின்றன. ஆகாசத்தில் ஒடுங்குகின்றன.

தைத்திரியம்

"யதேஷ ஆகாச ஆநந்தோ நஸ்யாத்
கோ ஹ்யேவாந்யாத் க: ப்ராண்யாத!"

(2—7—8)

(இ-ள்) இந்த ஆகாயம் ஆநந்தம் ஆகாவிடின் யார் உயிர்ப்பார்? யார் பிழைப்பார்?

" ஆநந்தோ ப்ரஹ்ம "

(இ-ள்) ஆனந்தம் பிரமம்.

இந்த ஞானகாசமே சிதம்பரம் இதுவே பராசத்தி வடிவம்—பிரம சொரூபம். இதனைத் தரிசித்தவர்—அடைந்தவர் இம் மாயாப் பிரபஞ்சத்தில் மீண்டு வரமாட்டார்—முத்தியடைவர் என்பது. சிதம்பரத்தை தரிசிக்க முத்தி என்பதன் உண்மைப் பொருள் இதுவே என அறிக. வாய்மையான சாதகயோகங்களால் பிணி மூப்புச் சாக்காடுகள் ஒழியப் பெற்றவரே ஞானகாசமாகிய சிதம்பரத்தை அடைந்து உலகுடைய ஒரு முதலாகிய பிரமத்தைக் கண்டு அது ஆதற்கு அருகராவர். பின்வரும் பிரமாணங்கள் இவ் உண்மையை நன்கு புலப்படுத்துதல் கண்டு கொள்க:

திருவாசகம்

பிறவிதனை யறமாற்றிப் பிணிமூப்பென்
[றிலவிரண்டும்
உறவினொடு மொழியச்சென் றுலகுடைய
[வொருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சித்
[றம்பலமன்னி
மறையவரும் வானவரும் வணங்கிடநான்
[கண்டேனே.

பாங்கினொடு பரிசொன்று மறியாத
[நாயேனை
ஓங்கியுளத் தொளிவளர வுலப்பிலா
[அன்பருளி
வாங்கிவினை மலமறுத்து வான்கருணை
[தந்தானை
நான்குமறை பயில்தில்லை யம்பலத்தே
[கண்டேனே.

(ஷை கண்டப் பத்து, செ. 6, 8.)

[“நான்கு மறை பயில் தில்லை அம்பலம்” என்பதன் பொருளை வித்தகம் இல. 25 இல் “நான்மறை” என்னும் கட்டுரையில் காண்க.]

தூலம் ஞானகாசத்தில் எவ்வாறு ஒடுங்குவது? அசுத்தம் நீங்கி அமலமடைந்து சூக்குமமாய் (ஓ வடிவம்) அருளாகிக் கரைந்து அருவமாய் ஒடுங்க வேண்டும். இதுவே ஒடுக்க முறையாகும். அன்றிச் சரீரம் அசுத்தம் நீங்கி அமலமடையாது பிணவியலடையுமாயின் அஃது ஒடுக்க முறை ஆகாது பிறவி நெறியேயாகும். அசுத்தம் ஞானகாசத்தை அடைதல் அசம்பாவிதம். இது பற்றியே “ஒடுங்கிடுங் காலம் உடலிங்கே வீழ்ந்தால் ஒடுங்கினதில்லை என்றுணர்வாய்”

எனவும்,

“மேலோரு சிவத்தின் வடிவதாம் அருளாய் வெளியதாய் உலகு கண்டிடவே.”

எனவும் பெரிய நாயகி அருளால் சாமவேதத்து “அசி” பதப்பொருளை உரைக்க எழுந்த சிவாத்துவித சைவ சித்தாந்த நூலாகிய “சுத்த சாதகம்” வெள்ளிடை மலைபோலக் கூறி வற்புறுத்துவதாயிற்று என அறிதல் வேண்டும்.

திருவாசகம் திருமந்திரம் தேவாரம் திருவாய்மொழி ஔவை குறள் முதலியனவும் மற்றைய சித்தர் நூல்களும் வேதம் உபநிடதம் முதலியனவும் இவ் வுண்மையையே பலப்பல கற்பனைகளால் நன்கு வற்புறுத்தியனவாயினும், கால கதியால் தற்காலச் சைவருட் பலர் அந்தணாளர் அருமறைகளால் விளக்கப்பட்ட இவ் உண்மையை அறியமுடியாதவர் ஆயினர். உண்மையை அறிவது என்றால் படிப்பாலும் பட்டங்களாலும்முடிவதன்று. அதற்குரிய கல்வியைக் கற்றுக்கேட்டு உணரவேண்டும். வாய்மையான கல்வி கேள்வி இன்ன என்பது அமயம் நேர்ந்துழி விளக்கிக் கூறப்படும்.

விதண்டா வாதங்களும் வறட்டுத்தனமான சர்ச்சைகளும் பயன்படமாட்டா. தத்துவ நூல்களைப் படிப்பினால் சாமர்த்திய முடையவர்கள்—இலக்கண இலக்கிய வித்துவான்கள் அறிதலும் மொழி பெயர்த்தலும் முடியாத காரியம் என்பதை “Le livre d'Artéphus” என்னும் மிகப் பழமையான பிரஞ்சு (French) நூலில் Artéphus என்பவர் பின்வருமாறு விளக்குகின்றார். அதன் மொழிப்புரை வருமாறு:

“எளிய மதியுடைய மூடனே!
“உனது படிப்பினால் ஞான சாத்தி
‘ரங்களை மொழிபெயர்க்க ஆசைப்
“படாதே! உன் படிப்பு வல்லபத்தால்
“நீ அதன் பொருளை உணரமாட்
“டாய்! தூலப் பொருள் கண்டால்,
“அது உன்னை அதிக மூண்டமாக்கி
“நீ கரையேற முடியாதவாறு உன்னை
“ஆழ்ந்த நரகில் தள்ளி விடும்”
என்பது.

தூலப் பொருள் என்றால் என்னை? அது தான் போலிப் பொருளாகிய பொய்ப் பொருள்-“வெள்ளிக்கிழமை” என்றால் வெள்ளி=silver, கிழமை=day எனப் பொருள் கூறுவது போன்றது.

படிப்பு வல்லபத்தால் வேத நூல்களுக்கும் — திருவாசம் திருமந்திரம் முதலிய அந்தணாளர் அருமறைகளுக்கும் பொருள் காண்பதும் இன்ன நீர்மையதே என அறிதற்பாற்று.

பஞ்ச பூதப் பயில்வு அஃதாவது பஞ்சபூதங்களை ஆராய்ச்சி செய்வது பௌதிக பஞ்சீகரண பேதங்களை அறிவது வேறு. ஒரு பாஷையையோ பல பாஷைகளையோ படிப்பது வேறு. முதலதோ அறிவு விளக்கத்தால் ஆவது. மற்றையதோ ஞாபக சத்தியினால் ஆவது.

தற்கால விஞ்ஞானிகளும் (மேல் நாட்டாரும் கீழ் நாட்டாரும் உள் நாட்டாரும்) எத்தனையோ கஷ்டங்களை அடைந்து அவதியுற்று தூல பௌதிக ஆராய்ச்சிகளை நடாத்துகின்றனர். எத்தனையோ நூற்றாண்டுகளாக ஆராய்ச்சியால் ஒரு சிறிதும் கண்டு அறியப்படாத உண்மையை அஃதாவது “ஒரு பூதியம் மற்றொரு பூதியமாய்த் திரிதல்” என்னும் தத்துவ ரகசியத்தை மேனாட்டு ஆராய்ச்சி வல்லுநர் சிலர் கண்டு

அறிந்து ஐயமறத் தெளிந்து அறுதி செய்து விட்டனர். பின் வரும் பிரமாணம் இதற்கு உறு சான்றாகின்றது.

ஒரு பௌதிகம்
மற்றொரு
பௌதிகமாய் மாறுதல்

1932ம் ஆண்டு டிசம்பர் மீ 15ம் தேதியில் வெளிவந்த "La Nature" என்னும் பிரான்சு (French) சஞ்சிகையில் 537ம் பக்கத்தில் "La désagrégation de la matière" = (தூலப் பொருளின் திரிபு) என்னும் கட்டுரையில் Y. Mayor (மேயோர்) என்னும் மேனாட்டு விஞ்ஞானி கூறுவது:—

"எவ்வளவோ காலம் "உழைத்த தன் பயனாக, சில "முயற்சியால் ஒரு பூதியம் மற் "றொரு பூதியமாக ஆக்கப்படும் "எனக் கண்டு அறியப்பட்டது. "அதன் பயன் மிகச் சிறிதே எனி "னும் (தூலப் பயன்—பிரயாசத் "துக்குத் தக்க பயன்) பூதிய மாற் "றம் உண்டு என்பது கண்டு அறி "யப்பட்டது என்று உறுதியாகக் "கூற முடிந்ததே பெரும் பேறாகும்."

"இதனால் பெறப்படுவது யாதெ "னில், பன்னெடுங்காலத்துக்கு முன் "வந்த "வாதிகள்" என்போர் "கூறிய அனைத்தும் சுத்தப் பொய் "என்று அஞ்சாமல் வாதித்துச் சாதி "த்தவர்களும் அக் கொள்கைகளை "ஆமோதிக்கும் சாஸ்திரிகளும் ஏமாற் "றம் அடைவதன்றி (வாதம் செய் "தல் அஃதாவது பொன் செய்தல்) "ஒரு லோகம் மற்றொரு லோகமாக "மாற்றப்படலாம் என்பதை எவ்வித "சங்கையும் இன்றி ஒப்புக்கொள்ள "வேண்டியதே என்பதாம்."

முன்னிலைகள் போலவே தன்னிலையாகிய சரீரமும் பஞ்ச பௌதிக வடிவினது — பஞ்ச லோக முடையது என்பது கண் கூடு அல்லவா? முன்னிலை களிம்பு நீங்கிப்பொன்னாக மாற்றமடைதல் கண் கூடாகவே, தன்னிலையாகிய சரீரமும் (உடலுயிர்) உரிய சாதகங்களால் அசுத்தம் நீங்கி விமல தேகமாய்—பொன் தேகமாய்—மாடு தேகம் என்னும் இடப தேகமாய் (மாடு என்றால் பொன் என்பர்.) ரசக தேகமாய் மாற்றமடையும் என்பது வெள்ளிடை அல்லவா? சத்தியம் அல்லவா? இந்த ரசக தேகம் தான் விதேகம் எனப்படுவது. இதுவே பின் அமல தேகம் என்னும் பிரணவ தேகமாய் அருளாகிக் கரைந்து ஞானாகாசத்தில் ஒடுங்குவது என்க. இதனையே மீண்டுவாரா நெறி என வேதம் முழங்குகின்றது. உடலும் உயிரும் ஒழிவற ஒன்றி ஞானாகாச வடிவமாய் நித்தியத்துவம் பெறுதல் என்னும் பண்டைச் சைவ முத்தி நிலை பன்னெடுங் காலமாய் மறை பொருளாய் விட்டமையால் தற்காலத்தவர் இவ் உண்மையை நம்புவது கஷ்டமாயிற்று. தமது அறிவுக்கு எட்டாதவற்றையும் தாம் கண்கூடாக் காணாதவற்றையும் பொய் எனத் துணிவது நம்மவர் மாண்பு.

மிகப் பழைய காலத்தில் நமது இந்திய தேசத்தவர் ஆகாய விமானங்களில் நின்று போர் செய்தார்கள் என்று புராணேதிகாசங்கள் கூறுவது கேட்டு "இந்தப் பொய் கந்தப் புராணத்திலும் இல்லை" என்பது போல இதனைப்பொய் என எள்ளி நகையாடினோர் மிகப் பலர் அல்லவா? அத்தகைய பொய் இப்பொழுது மெய்யாகவில்லையா? ஆகாய விமானங்களில் பிரயாணஞ் செய்வதையும் அவற்றில் நின்று போர் புரியப்படுதலையும் கண்கூடாகக் காண்கின்றனம் அல்லவா? இது போலவே உடலுயிர் அமலமடைந்து சூக்குமமாய் அருவமாய் மறைதலே உண்மை முத்தி என்பதும் பலரும் கண்கூடாகக் காணும் காலமும் சமீபமே என்று ஏன் கூறப்படாது?

இன்னோரன்ன உண்மைகளை எல்லாம் தத்துவப் பெரியாராகிய உத்தமர் திருமறைகளாக அருளிப் போந்தனர் ஆயினும், தற்காலச் சைவர் எனப்படுவோர் திருவருளை நாடி இத்தகைய மூலபண்டாரமாகிய சேமநிதியால் பயனடைய முடியாது அவற்றை அநர்த்தம் செய்து பண்டைக் காலப் பௌத்த சமண மத மேற்கொண்டு சிவ காருண்ணியம் என எதை எதையோ கண்டு பிடித்து முன்னிலைகளை நிறை முறையோடு பஞ்சீகரணித்து அறமுதல் நாற்பொருட் பயனையும் அடைய முடியாது— வாய்மையான சைவராய் நித்தியத்துவம் பெற முடியாது "அதைத் தொடாதே! இதைத் தொடாதே!" எனக் குழறி மூட்டுப் பூச்சி கொசு தேள் பூரான் பாம்பு பேன் சீலைப் பேன் முதலிய தீய பிராணிகளையும் (உறிச் சமணர் போல) கொல்லாமல் இருப்பதே முக்கிய விரதமாகக் கொண்டு அஃதாவது அவசிய நேர்ந்துழியும் கொலை செய்யக் கூடாது எனப் பிதற்றி, அதனால் "சைவராய் விட்டேம்" என்ற அகம் பிரமத்தினால் மூடப்பட்டுத் தமது உடலாகிய ஊன் வாட வாடக் கருவருந்தச் சிவகாருண்ணியம் அற்றவராய்ப் பாவிகளாய் மாண்டு பிறவி வலைப் படுபவர் ஆயினர்—சாதலை எதிர்பார்த்த எம்போலிய பாவிகளாய்ச் சோம்பேறிகளாய் வீற்றிருக்க வேண்டியவராயினர். தம் உயிர்க்கு இரங்கி இத்தற்கொலையைத் தவிர்த்து உய்தியடைய முடியாதார் பிற உயிர்க்கு இரங்கும் சிவகாருண்ணியம உடையேம் என்பது வாய்மையாகுமா? இத் தற்கொலையைத் தவிர்த்து இன்புற்ற நித்தியத்துவம் பெறவேண்டும் என்றே அக் காலச் சிவகாருண்ணிய மூர்த்திகளாகிய பௌத்த சமணர்களது வஞ்சகச் சூழ்ச்சிகளினின்றும் திருவருட் சகாயத்தால் தப்பிப் பிழைத்து நித்தியத்துவம் பெற்ற நமது குருநாதராகிய அப்பர் தமது காண்முனைகளாகிய பிற்காலத்தவரெல்லாம் அறிந்து உய்தி அடைய வேண்டும் என்றே

"பூத்திருத்தி பூத்திருத்தி என்பீராகில் பொல்லாப் புலால்திருத்தி போக்கலாமே".

ஈழநாடும் தமிழும்

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன்
வித்துவான் ப்ரம்மஸ்ரீ சி. கணேசையர்
அவர்கள் எழுதியது

(பதிப்புரிமை கட்டுரை ஆசிரியர்க்கே உரியது)

(40-ம் வாரத் தொடர்ச்சி).

கனகசபைப்புலவர்

இவர் சென்னப் பட்டணத்திலே வசித்தபோது தாம் கண்டி ராசவின் புதல்வரான அழகர்சாமி பேரில் பாடிய மடற் பிரபந்தத்தை அரங்கேற்ற விரும்பி அவரிருந்த வேலூருக்கு ஒரு சீட்டுக்கவி எழுதி அனுப்பினர். அக் கவி வருமாறு.

சீறை நிலவு பொழியமுத கிரணசந்திரனென்ன
    வின்றிலகுகின்ற தொடையாய்
சோலர் படைக்கடலை வீரவேகங்கொண்டு
    திருமூல மாக்குபடையாய்
கொடிய தரு வைந்து மெழுமுகிலுமினை யல்லவென
    வித்தமருள்கின்ற கொடையாய்
கிலைவலைய மெங்கணுங் கல்விகிலை பெற்றிலகு
    கிகரற்ற கீர்த்தியுடையாய்
நிறைநிலவு தவமுமுயர் பொறைபலவு மென வெளவு
    செங்கை யுத்தண்டதீர
செயமாது குடிகொண்ட திண்புயாசல
    வுளர் திருமாதுவக்கு கெதியாய்
தென்னிலங்கேச வெழின் மன்னுமங்கசருப
    நிற்லழகர்சாமி யென்னுஞ்
சிங்க வேறனைய வுத்துங்க வுள்ளக்களி
    சிறந்திட மகிழ்ந்து காண்க
துறை நிலவு சலைவாரி கரைகண்டுயர்ந்து நின்
    றொல்குலத் வாசர் தம்பாற்
றேமிலா நண்புபெற்றோங்கு வைத்திய
    நாத சுகுணன் குலத்துதித்தோன்
தகளற்ற சிரளவை நகரத்து வருகனக சபை
    மிக்கதுன்று பத்தி
தூண்டகின் மாபெருமை பூண்ட சுமுகம் பெறச்
    சோர்விலா தெழுது நிருபம்
முறைநிலவு மிறைமைபெறு முடிமன்னர்திலக நீ
    முகமலர்க் தகமுவந்தே
மூளுமன்பாலணிய நீளுமின்பான விசை
    மெய்த்த மடன்மாலை தரவும்
முக தரிசனங்கண்டு மிகு கரிசனங் கொண்டு
    முன்பெய்தவுங் கருதிநின்
முன்னணுகு மென்றனக் கின்னருள் சுரந் தாழி
    மூதலகினீ வாழியே.

(தொடரும்.)

என்னும் மறை மொழியை இப் பேயுலகத்தில் உமிழ்ந்தார். உமிழ்ந்தும் என்னே? இதனைக் கொண்டவரும்—கொள்பவரும் யாவரும் இல்லையே! சரீரம் அழிந்து விடும்! அழிந்தே விடும்! அதனைப் பொருட் பண்ணக் கூடாது. அஃது பிணமாகி அழிந்த பின் வேறு எங்கோ சென்று சிவலோகம் சேர்ந்துவிடலாம் என, இப் புலால் அருத்தியைப் பூந்துருத்தி (அமல தேகம்) ஆக்கவேண்டும் என்ற அப்பர் திருமறைக்கு எதிர்மறையாகவே பிரசாரணம் செய்துகொண்டு சாதலடைபவரே ஆயினர் தற்காலத்தவர் என்பது வெள்ளிடை ஆயிற்று. இவ்வாறே பண்டைக்காலப் பௌத்த சமணரும் "நரை வரும் என்று எண்ணி நல்லறிவாளர் குழவி இடத்தே துறந்தார்" என்றவாறு (காலடியார்) நரை திரை நீங்க வேண்டும் என வார்த்தை மாத்திரமாக ஒருகால் கூறினர் உளராயினும் சரீரம் பிணமாகிச் சுட்டுச் சாம்பலாய்ப் போவது தான் பரி நிர்வாணம் (முத்தி) எனக் கூறி வேத உண்மைக்கு மாறுகப் போராடி மாண்டவரே என்பது தமிழ்ப் புலமையிற் சிறந்த அன்வர் எழுதி வைத்த செழுந் தமிழ் இலக்கியங்களால் வெள்ளிடை ஆகின்றது. மேலும் விரிப்பிற் பெருகும்.

இது காறும் கூறியவைகளால் பண்டைக்காலப் பௌத்த சமணரும் தற்காலச் சைவருட் பெரும்பான்மையோரும் முக்கியமான பலகாரணங்களால் ஒரினத்தவரே என்பது ஒருவாறு உணரத் தகும்.

சுபம்.

Sandhanam Printing Works, Pondicherry. Le Gérant, R. Nagarattinam